00081

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்ஆரம்ப மற்றும் ஆரம்ப வகுப்புக்களில் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் **2019**
**ESD1135/EPD3335** – கலைத்திட்டக் கற்கையும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடும்
இறுதிப்பரீட்சை - மட்டம் 03
03 மணித்தியாலங்கள்

---

காலம் : பி.ப 02.00 – பி.ப 04.00 திகதி : 03.03.2019

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி I

01. முன்பள்ளிக் கல்வியில் ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையின் முக்கியத்துவத்தினை விளக்குக.

02. பாரம்பரிய கற்பித்தல் முறைக்கும் ஒன்றிணைந்த கற்பித்தல் முறைக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

03. ஒன்றிணைந்த கற்பித்தல்-கற்றல் அணுகுமுறையின் மூன்று (03) விசேட இயல்புகளை எழுதுக.

04. ஆரம்பக் கல்வியில் ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறை காணப்படுவதன் அனுகூலங்கள் எவை?

05. ஆரம்ப வகுப்பு மாணவர்களிடம் காணப்படக்கூடிய விசேட ஆற்றல்கள் நான்கினைக் குறிப்பிடுக.

06. சுற்றாடல்சார் செயற்பாடுகள் என்னும் பாடத்தினைக் கற்பிக்கும் போது ஆரம்பக் கல்வி ஆசிரியரின் பொறுப்புக்கள் நான்கினைக்(04) விளக்குக.

07. "*மதிப்பீடு*" என்பதனால் நீங்கள் கருதுவது யாது?

08. "*செயலடைவுக் கோவை*" என்பதன் கருத்து யாது?

(08x05=40 புள்ளிகள்)

## பகுதி II

09. (i). முன்பள்ளிப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்காக கருப்பொருள் ஒன்றினைத் தெரிவுசெய்யும் போது நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் எவை?

(10 புள்ளிகள்)

(ii). முன்பள்ளிப் பிள்ளைகள் குழுச் செயற்பாட்டில் ஈடுபடும் போது அவர்களிடம் வெளித்தெரியக்கூடிய பண்புகள் நான்கினை விளக்குக.

(10 புள்ளிகள்)

10. (i). இலங்கையில் 1972 ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்பின் பிரதான அம்சங்கள் எவை?

(10 புள்ளிகள்)

(ii). 1972 ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்பிற்கும் 1997 ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்பிற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமை எவையென பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

11. *"இலங்கையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அத்தியாவசியமானவை"*

(i). மேற்படி கூற்றின் பிரதான கருத்து யாது?

(06 புள்ளிகள்)

(ii). முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி செயலமர்வொன்றைத் திட்டமிடுக.

(08 புள்ளிகள்)

(iii). ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்தினூடாக ஆசிரியரொருவர் அடையக்கூடிய அனுகூலங்கள் எவை?

(06 புள்ளிகள்)

12. (i). ஒன்றிணைந்த கற்றல்-கற்பித்தல் அணுகுமுறைக்கு திட்டமிடும் போது முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் எவ்வாறு செயற்பட வேண்டும்?

(10 புள்ளிகள்)

(ii). ஒன்றிணைந்த கற்றல் முறையில் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப் பொருத்தமான கருப்பொருள் ஒன்றினைத் தெரிவு செய்து வரிப்படங்களுடன் பாடமொன்றினைத் திட்டமிடுக.

(10 புள்ளிகள்)

13 (i). "*கணிப்பீடு*" என்பதனால் நீங்கள் கருதுவது யாது?

(06 புள்ளிகள்)

(ii). கணிப்பீட்டின் அனுகூலங்கள் எவையென உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(iii). கணிப்பீட்டு முறையினால் முன்பள்ளி ஆசிரியர்கள் அடையக்கூடிய அனுகூலங்களை விளக்குக?

(08 புள்ளிகள்)